# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் (திருத்தச்) சட்டம்

---

*[1987, ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1987, ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : சதம் 75

## 1987 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் (திருத்தச்) சட்டம்

ச. வ.—ஓ. 14/86
1829

(1987 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது)

### 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின் வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1987 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க அபிவிருத்திச் சபைகள் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துபின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின் 17அ என்னும் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின் 17அ என்னும் பிரிவைத் திருத்தல்.

(1) (அ) அதன் (1) ஆம் உட்பிரிவில் "அபிவிருத்திச் சபைகளின் நிறைவேற்றுக் குழுக்களினதும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "அபிவிருத்திச் சபைகளின் நிறைவேற்றுக் குழுக்களினதும், மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின்கீழும் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின்கீழும் முறையே மாநகர சபைகளினதும் நகரசபைகளினதும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) "கிராமோதய சபையொன்றும் ஒவ்வோர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் பிரதேச சபையொன்றும் தாபிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கிராமோதய சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் :—

"(2அ) பகிரங்க அலுவலரொருவராக அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் அலுவலரொருவராக இருக்கின்ற கிராமோதய சபையின் உறுப்பினர் எவரும், சபையால் அளிக்கப்பட்ட அல்லது அளிக்கப்படவுள்ள ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் சபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலோ அல்லது அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தில் ஒப்பமிடுதலோ ஆகாது.

(3) அதன் (3இ) என்னும் உட்பிரிவில், "மாவட்டச் செயலாளர் ஒருவரினுல் அத்தகைய கிராமோதய சபைக்குக் கையளிக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மாவட்டச் செயலாளர் ஒருவரினுல் அல்லது மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லது நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஏதேனும் மாநகரசபையினுல் அல்லது நகரசபையினுல் அத்தகைய கிராமோதய சபைக்குக் கையளிக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

ஏ 094634—2,845 (86/12)

(4) அதன் (3இ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(3ஈ) ஆளொருவர் பின்வரும் தகைமையீனங்களுள் எதற்கும் உட்பட்டிருந்தால், அவர் கிராமோதய சபையொன்றின் உறுப்பினர் ஒருவராகப் பதவி வகிப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும் :—

(அ) அவர் இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் ;

(ஆ) அவர் பதினெட்டு வயதை அடைந்திருக்காவிட்டால் ;

(இ) ஏதேனும் சட்டத்தின்கீழ் அவர் சித்த சுவாதீனமற்றவர் எனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ;

(ஈ) நேர்முற்போந்த மூன்றாண்டுகளுக்குள் நல்லொழுக்கப் பிறழ்வுக்கான தவறெதற்காகவும் அவர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால் அல்லது மூன்று மாதங்களுக்கு அல்லது அதற்கு மேலான காலப்பகுதியொன்றுக்கு அவருக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தால், அல்லது மூன்று மாதங்களுக்கு அல்லது அதற்கு மேலான காலப்பகுதியொன்றுக்கு அவர் மறியற்றண்டனை அனுபவித்துக்கொண்டிருந்தால் ;

(உ) இலங்கைத் தரைப்படையினை, இலங்கைக் கடற்படையினை அல்லது இலங்கை வான்படையினைச் சேர்ந்த கிரமமான படையின் உறுப்பினரொருவராக இருந்தால் ;

(ஊ) பொலிசு அலுவலர் ஒருவராக அல்லது பொலிசுப் பணிகளைப் பிரயோகிக்கின்ற பகிரங்க அலுவலர் ஒருவராக அவர் இருந்தால் ;

(எ) வங்குரோத்துக்காரர் என அல்லது கடன் இறுக்க வகையற்றவர் என வெளிப்படுத்தப்பட்டிருந்து, பொறுப்பு விடுவிக்கப்படாத வங்குரோத்துக்காரராக அல்லது கடன் இறுக்க வகையற்றவராக அவர் இருந்தால் ; அல்லது

(ஏ) முற்போந்த ஏழு ஆண்டுகளின்போது, 1976 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள், அவர் இலஞ்சமொன்றை அல்லது அவர் அவா நிறைவொன்றை ஏற்றிருந்தார் எனத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் அல்லது விசேட சனாதிபதி ஆணைக்குழுவொன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால் ;" ;

(5) உட்பிரிவுகள் (4), (5), (5அ), (5ஆ), (5இ), (6) ஆகியவற்றை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலமும் :—

"(4) (அ) கிராமோதய சபை ஒவ்வொன்றும், எவ்விடப்பரப்புக்காக அத்தகைய கிராமோதய சபையானது தாபிக்கப்பட்டுள்ளதோ, அவ்விடப்பரப்பினுள், பின்வரும் பணிகளையும் தத்துவங்களையும் கொண்டதாக அமைதல் வேண்டும் :—

(i) சமூகப் பொருளாதாரத் தரவுகளைச் சேகரித்தலும், கிராமிய அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தலும் ;

(ii) கிராமிய மட்டத் திட்டங்களை வகுத்தமைத்தலும், செயற்படுத்தலும் ;

(iii) மாநகரசபைகளினால், நகரசபைகளினால் அத்துடன் பிரதேச சபைகளினால் வகுத்தமைக்கப்பட்டு அத்தகைய மாநகரசபைகளினால், நகரசபைகளினால் அல்லது பிரதேச சபைகளினால் செயற்படுத்தப்படுவதற்கெனக் கிராமோதய சபைகளுக்குக் குறித்தொதுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அல்லது வேலைகளைச் செயற்படுத்துதலும் ;

(iv) பொது வாழ்வசதிகளையும், வேறு சேவைகளையும் ஏற்பாடு செய்தலும் ;

(v) மாநகரசபைகளுக்கு, நகரசபைகளுக்கு அத்துடன் பிரதேச சபைகளுக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டிய கருத்திட்ட உத்தேசங்களைத் தயாரித்தலும் ;

(vi) சூழலைப் பாதுகாத்தலும், முகாமைசெய்தலும் ;

(vii) அரச ஆதனத்தைப் பாதுகாப்பதற்கும், முகாமை செய்வதற்கும் உதவி வழங்க ஏற்பாடுசெய்தலும் ;

(viii) சிக்கனத்தை ஊக்குவித்தலும், விரயத்தை ஒழித்தலும் ;

(ix) அவ்விடப்பரப்பினுள் வதியும் ஆட்களினது சமய, ஒழுக்க மேம்பாட்டு, சமூக கலாசார, பொருளாதார உயர்ச்சிக்கான வசதிகளை ஏற்பாடுசெய்தலும் ;

(x) உற்பத்தியைப் பெருக்குவதற்கும், வேலைவாய்ப்பை உண்டுபண்ணுவதற்குமான நடவடிக்கைகளை எடுத்தலும் ;

(xi) எந்நிருவாக மாவட்டத்தினுள் அத்தகைய கிராமோதய சபையானது தாபிக்கப்பட்டதோ, அந்நிருவாக மாவட்டத்துக்காகத் தாபிக்கப்பட்ட அபிவிருத்திச் சபையினதும், எந்த மாநகர எல்லைகளுக்குள், பட்டினத்தினுள் அல்லது இடப்பரப்பினுள் அத்தகைய கிராமோதயசபை தாபிக்கப்பட்டுள்ளதோ அம்மாநகரம், பட்டினம் அல்லது இடப்பரப்புக்காகத் தாபிக்கப்பட்ட மாநகரசபையினதும், நகரசபையினதும் பிரதேச சபையினதும் தத்துவங்களைப் பிரயோகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும், கடமைகளைப் புரிதலும் தொடர்பிலான விதப்புரைகளை இயைபான அபிவிருத்திச் சபைக்கு, மாநகர சபைக்கு அல்லது நகரசபைக்கு அல்லது பிரதேச சபைக்குச் செய்தல்.

(ஆ) எவ்விடப்பரப்புக்காக அத்தகைய கிராமோதய சபையானது தாபிக்கப்பட்டதோ, அவ்விடப்பரப்பினுள் அமைந்துள்ள வளவு, காணி அல்லது கட்டிடம் எதனுள்ளும், அதற்கெனக் கிராமோதய சபையினால், எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட ஆளெவரும் நுழையலாமென்பதுடன், இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியினால் கிராமோதய சபைக்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய புலனாய்வுகளை அல்லது விசாரணைகளை அதன்மேல் செய்யலாம்.

(இ) பந்தி (அ) என்பதன்கீழ், கிராமோதய சபையொன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளெவரும் அவரது கடமைகளைப் புரிகையில், அவரை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற வேறு ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவரின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இருநூறு ரூபா குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(5) (அ) கிராமோதய சபை ஒவ்வொன்றும், அதன் பொது நிதிசார் நோக்கங்களுக்காக, நிதியமொன்றைத் தாபித்தல் வேண்டும்; இதில் பின்வரும் முறையில் பெறப்பட்ட பணம் வரவில் வைக்கப்படுதல் வேண்டும் :—

(i) அரசாங்கத்தினால் செய்யப்படும் மானியக்கொடைகள் அல்லது வேறு ஒதுக்கீடுகள் ;

(ii) நன்கொடைகள் அல்லது வேறு தன்னிச்சையான உதவு தொகைகள்.

(ஆ) இச்சட்டத்தின்கீழ், கிராமோதய சபையானது, அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், பணிகளைப் புரிகையிலும், அதனால் உறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செலவுகளும், நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும்.

(இ) ஒவ்வொரு கிராமோதய சபை நிதியக் கணக்காய்வுக்கும் கணக்குகளுக்கும் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையானது ஏற்புடையதாதல் வேண்டும்.

(6) கிராமோதய சபை ஒவ்வொன்றும், அத்தகைய கிராமோதய சபைக்கு இச்சட்டத்தினால் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தினால் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாட்களையும் வேலைக்கமர்த்தவும் அவ்வாளுக்கு வேதியமளிக்கவும் தத்துவமுடையதாதல் வேண்டும்"; அத்துடன்

(6) அதன் (7) ஆம் உட்பிரிவில் " கிராமோதய சபை அல்லது பிரதேச சபை" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "கிராமோதய சபை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் :—

" 18. (1) அபிவிருத்திச் சபையொன்றானது விடயத்திற்கேற்றவாறு மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தால் நகரசபைகள் கட்டளைச்சட்டத்தால், அல்லது பிரதேச சபைகள் சட்டத்தால் அல்லது அதன்கீழ் ஏதேனும் மாநகரசபைப் பிரதேசத்துக்கென, நகர் சபை இடப்பரப்புக்கென அல்லது பிரதேச சபை இடப்பரப்புக்கென அமைத்துருவாக்கப்பட்ட ஏதேனும் மாநகர சபைக்கு அல்லது நகர சபைக்கு அல்லது பிரதேச சபைக்கு மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தால் நகர சபைகள் கட்டளைச்சட்டத்தால், பிரதேச சபைகள் சட்டத்தால் அல்லது எழுத்தி

லான வேறு ஏதேனும் சட்டத்தால் ஏதேனும் கடமை அல்லது பணி சுமத்தப்பட்டுள்ளவிடத்து, அல்லது குறித்தொதுக்கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய அபிவிருத்திச் சபை எந்த நிருவாக மாவட்டத்திற்கென அமைத்தருவாக்கப்பட்டுள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்திற்குள் அமைந்துள்ள ஏதேனும் மாநகரப் பிரதேசத்தின் அல்லது ஏதேனும் நகரசபை இடப்பரப்பின் அல்லது ஏதேனும் பிரதேச சபை இடப்பரப்பின் நிருவாக எல்லைக்குள் இச்சட்டத்தால் அல்லது இதன்கீழ் அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அத்தகைய கடமையை அல்லது பணியைப் புரிதலோ அல்லது நிறைவேற்றுதலோ ஆகாது.".

(2) அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன்மூலம்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது-:— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

"(ஏஏ) அத்தகைய அபிவிருத்திச் சபையானது எந்நிருவாக மாவட்டத்துக்காக அமைக்கப்பட்டதோ, அந்நிருவாக மாவட்டத்துக்குள் வருகின்ற ஏதேனும் இடப்பரப்புக்காகத் தாபிக்கப்பட்ட மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேச சபை எதற்கும், வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் நிகழ்ச்சித்திட்டத்தின் அல்லது வேலையின் செயற்படுத்தலைக் கையளித்தல்.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.**

(அ) அவ்வட்டவணையின் (i) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும் :—

"(i) கால்நடை அத்துமீறலைக் கட்டுப்படுத்துதலையும் மண் பேணலையும் உள்ளடக்கும் கமநலச் சேவைகள்.".

(ஆ) அவ்வட்டவணையின் (viii) ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும் :—

"(viii) கரையோரப் பேணலை உள்ளடக்கும் கடற்றொழில்";

(இ) அவ்வட்டவணையின் முடிவில் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும் :—

"(xvi) சூழல்.",

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கால சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.